Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 337

திங்கட்கிழமை
28 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 11
வள்ளுவர் ஆ[illegible]





தேங்காயில
தொடங்கியிருக்கிற
வரிசை யுகம் எங்க
போய்
முடியப்போகுதோ?



# தேங்காய் வரிசையைக்கூட நிறுத்த முடியாத அரசாங்கம்

## அநுர மீது சஜித் சாடல்

கொழும்பு, ஒக்ரோபர் 28

தேங்காய் வரிசையை நிறுத்த முடியாத மற்றும் பொருட்களின் விலையை குறைக்க முடியாத அரசாங்கத்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் வெற்றிகரமான ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

15

## காட்டுயானை தாக்கி இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 28

முத்தையன்கட்டில், முத்து விநாயகபுரம் கிராமத்தில் பேராற்றை அண்டிய பகுதியில் புகுந்த 3 காட்டு யானைகளால்

15

## மயங்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

லண்டனிலிருந்து உறவினரைப் பார்க்க வந்தவர் மயங்கிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார். கணேசராசா தியாகராசா (வயது - 56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கல்வியங்காட்டிலுள்ள உறவினரைப் பார்ப்பதற்காக லண்டனிலிருந்து வந்த இவர், கடந்த 17ஆம் திகதி பேருந்

15

## ஜனாதிபதி அநுரவுக்கும் பெரும்பான்மை இல்லை

- 3 மாதம்கூட ஆட்சி நீடிக்காது
- வரிசை யுகம் உருவாகும் சாபம் போடுகிறார் ரணில்



கொழும்பு, ஒக். 28

இந்த அரசாங்கம் மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்கும் என நான் நினைக்கவில்லை. மூன்று வாரங்கள் கூட நீடிக்காது. எனக்கும் பெரும்பான்மை இருக்கவில்லை. அநுர குமார திஸாநாயக்கவுக்கும் பெரும்பான்மை

15

## சாத்திரம் பார்ப்பதாகக் கூறி வீட்டாரை மயக்கி தாலிக்கொடி அபகரிப்பு

மன்னார், ஒக். 28

மன்னார், நறுவிலிக்குளத்தில் சிறுவனுடன் சென்ற பெண்ணொருவர் அங்குள்ள வீடு ஒன்றுக்குச் சென்று சாத்திரம் பார்ப்பதாக கூறி வீட்டில் இருந்தவர்களை சுய நினைவை இழக்கச் செய்து

15

## மஹிந்தவுக்கு கூஜா தூக்கியவர் காலம் முழுவதும் கடற்றொழில் அமைச்சரா?

### பிமல் ரத்நாயக்க நெத்தியடி

யாழ்ப்பாணம், ஒக். 28

கடந்த காலங்களில் வன்முறைகளில் ஈடுபட்ட, மஹிந்த ராஜபக்சவுக்கு கூஜா தூக்கிய, லஞ்ச ஊழல் செயற்பாடுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரவளித்த, மக்கள் விரோத சட்டத்திருத்தங்களுக்கு ஆதரவளித்த, மக்களுக்கு சுமை ஏற்படுத்திய வரி உயர்வுக்கு ஆதரவளித்தவர்கள், எல்லா அரசாங்கத்திலும் கடற்றொழில் அமைச்சர் தானே என்று கூறுகின்றார்.

15

## 'பார் பெர்மிட்' விவரங்களை அரைகுறையாக வெளியிட்டால் இலகுவாக தப்பித்துவிடுவார்கள்

### புலனாய்வுத் தகவல்களை திரட்டி ஆதாரத்துடன் அம்பலப்படுத்துமாம் அரசு

யாழ்ப்பாணம், ஒக். 28

ரணில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 200 க்கும் அதிகமான 'பார் பெர்மிட்டுக்களில்' அதிகளவானவை வடக்கு மாகாணத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அரைகுறையாக வெளியிட்டால் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துவிடுவார்கள். புலனாய்வுத் துறை ஊடாக முழுமையான தக

15

## 12 மீனவருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை, ஒக். 28

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 12 நாகை மீனவர்

15

## நல்லாட்சியில் கிடைத்த வாய்ப்பை கோட்டைவிட்டது கூட்டமைப்பே

### பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்

யாழ்ப்பாணம், ஒக். 28

கடந்த காலத்தில் மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியை முழுமையாகப் பாதுகாத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான். அன்று மக்கள் மீது சுமைகள் அதிகரித்தபோது ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது போன இவர்கள், இன்று அநுரகுமாரவின் ஆட்சியில் பல விடயங்களைச் செய்யப்போகின்றோம் என்று கூறு

15







மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சிக்கு ஆசனம் கேட்பது தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கா?

## சரவணபவன் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 28

**தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனத்தையாவது பெறவேண்டும் என கிளிநொச்சியில் ஒருவர் பரப்புரை முன்னெடுப்பது தமிழ்த் தேசியத்தை அழிக்கும் நபர் ஒருவரை நாடாளுமன்றம் கொண்டு செல்வதற்கான முயற்சியா? என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கேள்வி எழுப்பினார்.**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பரப்புரையின்போது அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியில் இருக்கும் ஒருவரின் சூழ்ச்சியால் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் பலர் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி சுயேச்சையாக மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகிறோம். தமிழரசுக் கட்சியில் இருந்து பல்வேறுபட்ட சூழ்ச்சிகளால் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதனை நாம் வேடிக்கை பார்க்கமுடியாது.

இவ்வாறான நிலையில் ஒருவர் தமிழரசு கட்சி ஓர் ஆசனத்தையாவது பெற வேண்டும் என்ற முயற்சியில் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் நபரை போனஸ் ஆசனத்தில் நாடாளுமன்றம் செல்ல வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அவர் வேறு யாரும் அல்லர். அண்ணன் பாலசிங்கத்துக்கு ஒப்பானவர் என தனது நண்பரை அறிமுகம் செய்தவரே நாடாளுமன்றம் செல்வதற்கு மக்களிடம் வாக்கைக் கேட்கிறார்.

தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தெளிவாக இருக்கிறார்கள். யாருக்கு வாக்களிக்க வேண்டும் யாரை நிராகரிக்கவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளார்கள்.

ஆனால் தமிழரசுக் கட்சியில் உள்ள ஒருவர் எப்படியாவது தான் தோற்றாலும் பரவாயில்லை தமிழ்மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு தமிழ்த் தேசியத்தை விலைபேசும் ஒருவரை போனஸ் ஆசனத்தில் நாடாளுமன்றம் செல்ல வைப்பதற்கு படாதபாடுபடுகிறார். ஆகவே இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களை நாடாளுமன்றம் அனுப்புவதன் மூலம் எமது அபிலாஷைகளை ஒரே குரலில் ஒலிக்கச் செய்ய முடியும் - என்றார். (ஒ-125)

# ஜனாதிபதியுடன் முரண்பாடில்லை



## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தனக்கும் இடையில் அரசியல் ரீதியில் மோதல் ஏற்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் போலியானவை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

போலிகளை உருவாக்குவதிலும், கட்டுக்கதைகளை பரப்புவதிலும் சிலர் வல்லவர்கள். இப்படியானவர்கள்தான், எனக்கும், தோழர் அநுரவுக்கும் இடையில் அரசியல் போர் ஏற்பட்டுவிட்டதாகக் கூறிவருகின்றனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவு தொடர்பில் ஜனாதிபதிக்கும் எனக்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவை போலியான தகவல்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


## பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
## (யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

கடற்றொழில் மக்களுக்காக அயராது உழைக்கும்
ஈழ மக்கள் ஜனநாயக கட்சியையும்
அதன் செயலாளர் நாயகம்
கௌரவ டக்ளஸ் தேவானந்தா மற்றும்
கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
ஆகியோரை ஆதரித்து வெற்றிபெறச் செய்வோம்.

மத்தியில் கூட்டாட்சி. !
மாநிலத்தில் சுயாட்சி.!
உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
**டக்ளஸ் தேவானந்தா**
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகம்)



1
4

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக
செயலாளர், கட்சியின் ஊடகப்பேச்சாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

X

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | X | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

உடுத்துறை 10ம் வட்டார கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்


# கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்

யாழ்ப்பாணம், ஒக்.28

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படும் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக முன்றலில் இடம் பெறவுள்ளது.

சிறுதொழில் முயற்சியாளர்க ளும், சௌபாக்கியா உற்பத்திக் கிராம முயற்சியாளர்க ளும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கவுள்ளனர். (ச-66)



நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் ஒரு தொகுதியாக அடங்கும் கிளிநொச்சி மாவட்டில் வாக்காளர் அட்டைகள் தபால் உத்தியோகத்தர்களால் நேற்று விநியோகிக்கப்பட்டன. (ச-113,27)

# சுதந்திர முன்னணியின் அலுவலகங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தேர்தல் அலுவலகங்கள் தீவகம் மற்றும் நல்லூர்த் தொகுதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தீவகத் தொகுதிக்கான அலுவலகம் அல்லைப்பிட்டி பகுதியிலும், நல்லூர்த் தொகுதிக்கான அலுவலகம் மணியந்தோட்டம் பகுதியிலும்திறந்துவைக்கப் பட்டன.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் அலுவலகத்தை திறந்துவைத்தார். (ச-20)


## மலரவிருக்கும் புதிய ஆட்சி மக்களால் மக்களுக்கான ஆட்சி
## ஊழலற்ற தேசத்தை
## Dr.S.சிறீபவானந்தராஜா
## அவர்களுடன் கைகோர்த்து உருவாக்குவோம்



வாக்களிப்போம்

X 9

**Dr.S.சிறீபவானந்தராஜா**
(MBBS, M.Sc Medical admin)
முன்னாள் பிரதிப் பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

## எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கான செயல் திட்டம்

1. எமது தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.

2. யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 6 பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுமின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத் தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

3. இளைஞர் இருப்பை தக்கவைத்து கொள்ளும் நடவடிக்கைகள்!
   - வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
     உதாரணம்: வீட்டுத் திட்டங்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் முதலீட்டு திட்டங்களை செயல்படுத்துதல்.
   - கல்வி, விளையாட்டு மற்றும் கலைகளில் இளைஞகர்களின் ஈடுபாட்டை ஊக்குவித்து, போதைப்பொருள் மற்றும் வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்குதல்.


4. அறிவோம் ஆழ்வோம் செயல் திட்டம்
   - அரசியல் மற்றும் பொருளாதாரத்திற்கான பயிற்சி பட்டறைகளை உருவாக்கி, கிராமம் முதல் நகரம் வரை விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
   - இதற்கான ஆக்கமும் ஊக்கமும் வழங்குவதன் மூலம், சிறந்த ஒரு தலைமுறையை உருவாக்குதல்.

5. போக்குவரத்து மேம்பாட்டு திட்டம்
   - பாதசாரிகள் மற்றும் மோட்டார் வாகன பயணிகள் நலன் கருதி, தார் வீதிகளில் காணப்படும் தூசு துகள்களை சுத்திகரிக்கும் இயந்திர கொள்வனவு.
   - போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளில் சிசிடிவி (CCTV) பொருத்துதல், சீரான போக்குவரத்து முறையினை கடைப்பிடிக்காதவர்களை கட்டுப்படுத்தல், சாலை விபத்துகள், குற்றங்களை பதிவு செய்து, பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தல்.

**இது எமது 2 வருட செயல் திட்டமாகும்; எமது 5 மற்றும் 30 வருடகால செயல் திட்டங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும்!**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்



4

சுயேச்சைக் குழு - 2


E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

மாற்றத்திற்கான நம்பிக்கை...



களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்

## பாராளுமன்றத் தேர்தல் 2024




தமிழர் தாயகத்தின்...
நில வளம் காக்க
கடல் வளம் காக்க
பனை வளம் காக்க

தமிழ் மக்களின்...
வாழ்வுரிமை காக்க
ஆளும் உரிமை மீட்க

ஆதரிப்பீர்!

உங்கள் தோழன்
### சுரேஷ் பிரேமச்சந்திரன்
அவர்களுக்கே உங்கள் வாக்கு



ஐக்கியம் – தேசியம் – ஜனநாயகம்
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024




தமிழ்த் தேசியத்தின் கடைசி நம்பிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இணுவில் பொதுநூலகச் சிறுவர் திறன் விருத்தி மையச் சிறார்களின் ஆக்கத்திறன் கண்காட்சி இணுவில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் சிறுவர் திறன் விருத்தி மைய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் இணுவில் பொது நூலகச் சிறுவர் திறன்விருத்தி மைய அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை, ஆசிரியர் இரா.அருட்செல்வம், ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ச-25, 66)

## ‘ஐக்கிய தீபம்’ பத்திரிகை வெளியீடு!



யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையால் ‘ஐக்கிய தீபம்’ பத்திரிகை வெளியீட்டு நிகழ்வு சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தப் பத்திரிகை வெளியிடப்படவுள்ளது.

பத்திரிகைக்கு கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள், பணிப்பாளர்கள், சங்கங்களின் அங்கத்தவர்கள் தங்களது ஆக்கங்களை மாவட்ட கூட்டுறவுசங்க சபை, வீரசிங்கம் கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-27)



## உழவியந்திரத்தை பந்தாடிய டிப்பர்

கிளிநொச்சி, ஒக்.28

வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்தை வேகக்கட்டுப்பாட்டை இழந்து வந்த டிப்பர் மோதித்தள்ளியுள்ளது.

இந்தச் சம்பவம் கோப்பாபிலவு புதுக்குடியிருப்பு வீதி ஐங்கன்குள வயல்வெளி அருகில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது.

வீதியின் ஓரமாகப் பெட்டியுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தை புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து முள்ளியவளை நோக்கி வேகமாக வந்த டிப்பர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து உழவு இயந்திரத்துடன் மோதியுள்ளது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. உழவு இயந்திரம் முழுதாக சேதமடைந்துள்ளது. விபத்துச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-25,19)

### ‘எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் தமிழ்த்தேசிய வாதமும்’

## நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக்.28

தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ‘எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழ்த்தேசிய வாதமும்’ எனும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு நிகழ்வு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் காண்டீபன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

குறித்த நூல் பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல் மற்றும் புள்ளிவிவரவியல் துறையின் பேராசிரியர் சங்கரன் விஜேசந்திரன், பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி மாலினி பாலமயூரன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.


**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி வரும். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். சிவபெருமானை வழிபட ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது அறிக்கையை இன்று விடுகிறார் கம்மன்பில



கொழும்பு, ஒக். 28

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 2ஆவது அறிக்கையை (இமாம் குழு அறிக்கை) பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில இன்று வெளியிடவுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களின், இதுவரை வெளியிடப்படாத அறிக்கைகளைதான் வெளியிடவுள்ளதாக கம்மன்பில அறிவித்திருந்தார்.

மேற்படி அறிக்கைகளை வெளியிடுவதற்கு அரசாங்கத்துக்கு 7 நாள்கள் அவகாசம் வழங்கி இருந்தார்.

இக்காலப்பகுதியில் அரசாங்கம் அவற்றை வெளியிடவில்லை. இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை அல்விஸ் குழுவின் அறிக்கையை கம்மன்பில வெளியிட்டிருந்தார். இவ்வறிக்கையை அரசு ஏற்கவில்லை எனவும், அரசியல் பழிவாங்கலை இலக்கு வைத்தே அது நியமிக்கப்பட்டது எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே இரண்டாவது அறிக்கையை கம்மன்பில, இன்று திங்கட்கிழமை வெளியிடவுள்ளார். (அ,ஒ,44)



# பூச்சாண்டிகாட்டும் தலைவர்கள் வேண்டாம்

## மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

தமிழ் மக்களுக்கு வெளிப்படைத்தன்மை பொருந்திய தலைவர்களே வேண்டும். நாடாளுமன்றத்தில் பூச்சாண்டி காட்டும் தலைவர்கள் தேவையில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் இலஞ்சம் ஊழலுக்கு எதிராக வெளிப்படையான மாற்றத்தின் தேவைப்பாடு உணரப்பட்ட நிலையில் அதற்கு எதிராக ஓர் அமைப்பு மாற்றத்தை உருவாக்கியது. அவ்வாறான ஒரு மாற்றம் தமிழ் மக்களிடையே வெளிப்பாட்டுத்தன்மை உள்ள அரசியல்வாதிகள் அல்லது அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கவேண்டும்.

ஏனெனில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்துக்கு நாட்டின் இலஞ்சம் ஊழல் பிரதான காரணமாக சுட்டிக் காட்டப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் வெளிப்படையாக செயற்படாது பூச்சாண்டிகளாக செயற்பட்டனர் - என்றார். (அ-ஒ,27)

### ஈஸ்டர் தாக்குதல் பாதிப்பு

# 5 பிரிவுகளாக நிவாரணம்

கொழும்பு. ஒக். 28

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐந்து பிரிவுகளாக நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

உயிர்த்த் ஞாயிறு தாக்குதலில் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அனைத்து பிரதிவாதிகளும் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட முழுத் தொகையையும் செலுத்தியுள்ள நிலையில் நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-6)

# கட்சியின் அமைப்பாளர் மீது கிளிநொச்சியில் தாக்குதல்

கிளிநொச்சி, ஒக். 28

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் போட்டியிடுகின்ற, சமத்துவக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரான முன்னாள் போராளி வேங்கை மீது மற்றொரு கட்சியின் உள்ளூராட்சிமன்ற வேட்பாளரான ஒருவர் நேற்று மாலை தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் ஸ்கந்தபுரம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மு.சந்திரகுமாருக்கு ஆதரவாக ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் பெண்கள் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கு சென்ற நபரே தர்க்கத்தில் ஈடுபட்டு, தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படுகின்றது. (அ-ஒ-214)

# யாழ்ப்பாணத்தில் 17 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத்தில் இதுவரை 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் இ.கி.அமல்ராஜ் தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ,26)

# 12 கைக்குண்டுகள் மீட்பு!

பருத்தித்துறை, ஒக். 28

பருத்தித்துறையில் நீண்டகாலம் பாவனையின்றிக் காணப்பட்ட கிணறு துப்புரவாக்கிய போது ஒரு தொகுதி கைக்குண்டு மீட்கப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்து மேலும் ஒரு கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் நீண்டகாலம் பாவனையின்றி காணப்பட்ட கிணற்றில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒரு தொகுதி கைக்குண்டுகள் மீட்கப்பட்ட நிலையில் நீதிமன்ற அனுமதிபெற்று, விசேட அதிரடிப்படையினரால் நேற்றைய தினம் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்டு குவிக்கப்பட்டிருந்த கழிவுகள் கிளறி தேடுதல் மேற்கொள்ளப்பட்டு மேலும் ஒரு கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து அங்கு மொத்தமாக மீட்கப்பட்டிருந்த 12 கைக்குண்டுகள் பருத்தித்துறைப் பொலிஸாரின் பிரசன்னத்தில் விசேட அதிரடிப்படையினரால் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டதுடன் மணற்காட்டு மணல் வெளியில் வெடிக்கவைத்து அழிக்கப்படுவதற்காக எடுத்துச்செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மன்னார் ஆயருடன் சந்திப்பு

மன்னார், ஒக். 28

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் நாடாளுமன்ற வேட்பாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகையை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஒ-66)

# இந்திய மீனவர்களின் இழுவைமடிக்கு அனுமதியில்லை

கொழும்பு, ஒக். 28

வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மேற்கொண்டுவரும் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடித்தொழிலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என இந்திய தரப்பு அதிகாரிகளிடம் தெரிவிக்கப்போவதாக மீன்பிடி அமைச்சின் செயலர் விக்கிரமசிங்க கூறியுள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையே கலந்துரையாடல் நடைபெறவுள்ள நிலையிலேயே மீன்பிடி அமைச்சின் செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'எமது கடல்வளத்தை இன்னொரு நாட்டினர் அழிப்பதை அனுமதிக்க முடியாது. தினமும் 400-500 இழுவை மடிப்படகுகள் வடபகுதிக்கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றன - என்றார். (அ-ஒ,6)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழியல் ஆய்வு நூலகம்

## நாளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியல்சார் ஆய்வுகளை முதன்மைப்படுத்தும் வகையிலமைந்த சிறப்பு நூலகப் பிரிவான தமிழியல் ஆய்வு நூலகம் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் முழுமையான நிதிப் பங்களிப்பில் நிறுவப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் அப்பால் விரிந்த தளத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுக்குரியதாக நூலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந் நூலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா ஆண்டை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் வாசகர்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் தமிழியல் நூலகத்தினால் பதிப்பிக்கப்பட்ட நூல்களின் வெளியீடும், பாலபண்டித மாணவர்களின் அரங்க நிகழ்வுகளும் இடம்பெறும். அத்துடன் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவையும், வாசிப்பு மேம்பாட்டு விழிப்புணர்வு தொடர்பான தெருவெளி ஆற்றுகையும் நடைபெறும். (அ-ஒ,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரிசிக்கும் வருமா வரிசை?

'எப்போதும் பிறர் மீது குற்றம் சுமத்துவது இலகு. ஆனால் ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதென்பது மிகக்கடினம் ' என்பது அநுரகுமாரவுக்கு இப்போது புரியத் தொடங்கியிருக்கும். எப்போதுமே அதிகார எதிர்ப்பு என்ற கொள்கையையே அநுரவும், அவரது ஜே.வி.பி.யும் தளரவிடாமல் பிடித்துவைத்திருந்தன. என்றாலும் சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தோடு இணைந்து, அமைச்சுப் பதவிகளைப் பெற்றபோது, அதிகார எதிர்ப்புச் சுருதியைக் கொஞ்சம் தணித்திருந்த ஜே.வி.பி.யினர், மீண்டும் எதிரணிக்குச் சென்றபோது பழையபடி முருங்கைமரத்தில் ஏறிக் கொண்டனர்.அரசாங்கம் செய்கின்ற எல்லாவற்றிலுமே குறைகளைக் கண்டுபிடித்து 'நாங்கள் மட்டும் ஆட்சியில் இருந்தால் இப்படிச் செய்திருப்போம், அப்படிச் செய்திருப்போம்'என்று வர்ணம் பூசிய சொற்களை மக்களிடம் கொண்டு சென்றனர். அப்படி அரசாங்கம் மீது குற்றம் சொல்வதை மிக இலகுவாகச் செய்து, அதையே தமது பிரசார ஆயுதமுமாக்கி, நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியையும் கைப்பற்றிக்கொண்ட அநுரகுமார, இப்போதுதான் 'பதவிபடுத்தும் பாட்டை' உணரத்தலைப்பட்டிருக்கிறார்.

அநுரவுக்கு முதலாவது அதிர்ச்சி மருத்துவமாக அமைந்தது, 'அறுகம்பே சுற்றுலாத்தலங்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடக்கலாம்' என்ற அமெரிக்காவின் பயண எச்சரிக்கை தான். அமெரிக்கா இப்படியொரு அபாய அறிவிப்பை விடுத்த அடுத்தகணமே இதற்காகத்தான் இத்தனை நாள் காத்திருந்தது போல பிரிட்டன், இஸ்ரேல், ஜேர்மன், கனடா போன்ற நாடுகளும் தங்கள் நாட்டுப் பயணிகளுக்கு பயண எச்சரிக்கையை விடுத்தன. இஸ்ரேல் இன்னும் ஒருபடிமேலே போய், 'உடனடியாக இலங்கையை விட்டுக் கிளம்புங்கள்' என்று இலங்கையில் தங்கியிருந்த தன்நாட்டுப் பிரஜைகளுக்கு கண்டிப்பாகச் சொல்லிவிட்டது. இந்த அறிவிப்புகள் சுற்றுலாத்துறையில் தாக்கத்தை ஏற்படுத்த, மறுமுனையில் சீட்டுக்கட்டுகள் சரிந்ததைப் போல, இலங்கையின் பொருளாதாரமும், பங்குச்சந்தைப்பெறுமதியும் மளமளவெனக் கீழிறங்கிவிட்டன. அநுர ஆட்சிக்கு வந்ததில் இருந்து மெல்ல மெல்ல ஏறுமுகம் நோக்கிப் பயணித்த இலங்கை ரூபாவின் பெறுமதியும் பழையபடி வீழ்ச்சிப் பாதைக்குத் திரும்பி விட்டது. ஒற்றைஅறிவிப்பிலேயே அநுரகுமார அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்திருந்தது அமெரிக்கா. இப்படி ஒரு பயண எச்சரிக்கையையும், அதனால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்களையும் எதிர்பார்த்திராத அநுர அரசாங்கம் திக்குமுக்காடிப் போனது. அதன் பின்னர்தான் முப்படைப் பிரதானிகளையும் பிரதமர் ஹரிணி சந்தித்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை நடத்தினார். உடனடியாக அறுகம்பே பகுதிக்கு மட்டுமல்லாது அதுபோல ஏனைய சுற்றுலாத்தலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. இருந்தபோதும், சுற்றுலாத்துறை இன்னும் பழைய நிலையை அடையவில்லை.

இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் அடுத்த இடி அரிசி வடிவில் அநுரகுமார அரசாங்கத்தை தாக்கத் தொடங்கியுள்ளது. நாட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அரிசியின் இருப்பு, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை எனவும், உடனடியாக அரிசியை இறக்குமதி செய்வதே இதற்கு ஒரே வழி என்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு அரிசியின் விலையை உயர்த்தவும் அனுமதி கோரினர். ஆனால் அநுர இதனைத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். 'அரிசி விலையையும் உயர்த்தமுடியாது. வேறு நாடுகளில் இருந்து இறக்குமதியும் செய்யமாட்டோம்' என்று அவர் பிடிவாதம் பிடிக்கின்றார். நாட்டில் முட்டைக்குத் தட்டுப்பாடு நிலவிய போது, இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதியானதால் தான் அதன் விலை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதன் விளைவாகவே அநுர ஆட்சிக்கு வந்த அடுத்தடுத்த நாள்களில் 30 ரூபாவுக்கு முட்டையை வாங்கக் கூடியதாக இருந்தது, ஆனால் முட்டை இறக்குமதியை அநுர அரசாங்கம் மேற்கொள்ளாமையால் மீண்டும் முட்டையின் விலை ஏறிவிட்டது. கிட்டத்தட்ட அதேபோன்ற நிலையே இப்போது அரிசிக்கும் நேரப்போகின்றது. அரிசியை இறக்குமதி செய்யமாட்டோம் என அநுரகுமார அரசாங்கம் அடம் பிடித்தால், நாட்டில் அரிசி அரிதான பொருளாக மாறும். பதுக்கல் வியாபாரிகள் தாம் நினைத்தவிலைக்கு விற்று கொள்ளை லாபம் அடிப்பார்கள். ஏழைகளின் வயிறு காய, பணமுள்ளோர் மட்டும் அரிசிச்சோறு உண்ணும்நிலை வரும். ஏற்கனவே தேங்காயின் விலையும் உச்சாணிக்கொப்பில் ஏறி நிற்கிறது. தேங்காய் வாங்கவென வரிசைகளில் நிற்கும் காட்சிகளும் தோன்றத்தொடங்கிவிட்டன. இனி அரிசிக்கும் வரிசை வரலாம். இப்படியே ஒவ்வொன்றுக்கும் வரிசைகள் உருவாக, இன்னொரு கோத்தாபயவாக அநுர மாறக்கூடும்.எனவே பிடிவாதத்தை விடுத்து மக்கள் நலனோடு எதனையும் ஆராய்ந்து முடிவெடுப்பதே அநுர அரசாங்கம் நிலைப்பதற்கு உள்ள ஒரே வழி.




# எல்பிட்டிய பிரதேசசபை தே.மக்கள் சக்தி வசம்

**யாழ்ப்பாணம், ஒக்.28**

**எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் வெற்றிபெற்று, ராஜபக்சக்களின் இறுதி அரசியல் கோட்டையையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.**

கடந்த தடவையைபோலவே இம்முறையும் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துள்ளது. எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எட்டு அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுவொன்றும் தேர்தலில் போட்டியிட்டன.

55 ஆயிரத்து 305 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். 36 ஆயிரத்து 825 பேர் வாக்களித்திருந்தனர். 520 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. 17 ஆயிரத்து 295 வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தி 15 ஆசனங்களும், 7 ஆயிரத்து 924 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், 3 ஆயிரத்து 957 வாக்குகளைப் பெற்ற மொட்டுக் கட்சிக்கு மூன்று ஆசனங்களும் கிடைக்கப்பெற்றன.

மக்கள் கூட்டணிக்கு இரு ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு ஒரு ஆசனமும், மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு ஒரு ஆசனமும், சுயேச்சைக்குழுவொன்று இரு ஆசனங்களையும் கைப்பற்றின.

அதேவேளை 2019 இல் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் மொட்டுக் கட்சி 17 ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தது. தேசிய மக்கள் சக்திக்கு இரு ஆசனங்களே கிடைக்கப்பெற்றிருந்தன. அந்தத் தேர்தலில் ஜே.வி.பி.யாகவே தேசிய மக்கள் சக்தி போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

# உளவுத் தகவல்கள் தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டு புலனாய்வுச் சேவைகள் வழங்கும் தகவல்களை 24 மணிநேரமும் கண்காணிப்பதற்காக மூன்று தனித்தனி புலனாய்வு அமைப்புகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரச பிரதானிகளின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# நாளுக்கு நாள் உயரும் இணையவழி மோசடிகள்

கொழும்பு, ஒக்.28

இணையவழி ஊடாக மக்களின் பணம் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# ஜனவரியில் அநுர இந்தியா பயணம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது அரச முறை வெளிநாட்டு விஜயமாக இந்தியா செல்ல உள்ளார். இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி ஜனவரி மாதத் தில் டெல்லிக்கு விஜயம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேறாத் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழு பங்கேற்க உள்ளது. (ச)

# வாகன இறக்குமதி இவ்வருட இறுதியில்

கொழும்பு, ஒக்.28

இந்த வருட இறுதிக்குள் வாகனங்களுக்கான இறக்கு மதிக்கு அனுமதி வழங்கப்படும் என்று திறைசேரி யின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணயநிதியத்துடன் மேற்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## நாளை

29.10.2024

செவ்வாய்க்கிழமை - ஐப்பசி - 12

சுபநேரம் : 10.33 - 12.03

ராகுகாலம் : 03.03 -04.33

## நாளொரு நல்வார்த்தை

உங்கள் விரோதிகள் சொல்வதைக் கூர்ந்து கேளுங்கள்; ஏனெனில் அவர்கள் தாம் உங்கள் குறைகளை சரியாக சுட்டிக்காட்டக் கூடியவர்கள்.

- பிராங்க்ளின் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கையில் விலகாத ஒரே கட்சி முன்னணியே

## செ. கஜேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

13க்கு எதிரான, தாயகம், சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடும் ஒரே தலைமை நாம்தான். ஏனைய அரசியல் கட்சிகளும், குழுக்களும் 13ஐ வலியுறுத்துகின்ற ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டவர்களே.

-இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் வேட்பாளருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 15ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்ற தரப்பு கஜேந்திரகுமார் அணி மாத்திரமே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக முன்னர் இருந்த சித்தார்த்தன், அடைக்கலநாதன் தொடக்கம் சுமந்திரன் வரை ஐ.நா.விலே உள்ளகப் பொறிமுறைக்காக பேசியவர்கள், 13ஐ ஏற்றுக் கொண்டு மாகாணசபைத் தேர்தலை அங்கும் வலியுறுத்திய தரப்புகளே அவை.

தீர்வு விடயத்திலே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் மாத்திரம் தான் ஒற்றையாட்சியை நிராகரித்து 16ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட ஏக்கிய இராட்சிய இடைக் கால வரைபை நிராகரித்து 13ஐ நிராகரித்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே உள்ளது.

அதேவேளை வடக்கு- கிழக்கிலே அநுர அரசாங்கம் ஊழல்களை கட்டுப்படுத்தப் போவதில்லை, வடக்குக் கிழக்கிலுள்ள ஊழல்வாதிகளை- குற்றவாளிகளை அவர் அரவணைத்துக்கொண்டுதான் செல்லப்போகிறார் என்பதை அண்மையில் இடம்பெற்ற ஈ.பி.டி.பி.யினருடனான சந்திப்பில் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். ஆகவே இனியும் தமிழ் மக்கள் ஏமாறாமல் அணி திரள வேண்டும் - என்றார். (ச-26,100)

# 13 இன் முழு அதிகாரமும் கிடைப்பதே சிறந்த தீர்வு!

## பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

**இலங்கை அரசியலமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளிலும் தமிழர் தரப்பு முதலில் கவனம் செலுத்தவேண்டும். தமிழ்மக்களுக்கு 13 ஆவது திருத்தம் தான் இறுதித் தீர்வல்ல - இவ்வாறு கொழும்புப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற 'எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழ்த்தேசிய வாதமும்' எனும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் நவம்பர் மாதம்14 ஆம் திகதியின் பின்னர் தமிழ்மக்களின் அரசியலில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். மக்களால் நிராகரிக்கப்பட்ட வர்கள் அரசியலிலிருந்து ஒதுங்கி விடவேண்டும். அதேநேரம் யதார்த்த அரசியலிலும் தமிழ்மக்கள் ஈடுபடவேண்டும். மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்தினாலே நாடு பிரிந்துவிடும் என்ற மனநிலையில் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் இருக்கும் நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தற்போது நடைமுறையில் இருக்கின்ற தீர்வை முழுமையாகப் பெறுவதற்கு முயலவேண்டும்.

தமிழ்மக்களுக்கு 13 ஆவது திருத்தம் தான் இறுதித் தீர்வல்ல.

சிங்கள மக்கள் மத்தியிலும், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பச் செய்து விட்டு இறுதித் தீர்வு நோக்கி நகர வேண்டும் - என்றார். (ச-66)



# வீட்டு வன்முறை விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக்.28

வன்னிமண் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நாவாந்துறை கிராமத்தில் வீட்டு வன்முறை தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் வளவாளர்களாக அருட் தந்தை வின்சன் பற்றிக் மற்றும் மாவட்ட செயலக போதை ஒழிப்புப் பிரிவின் வளவாளர் பாதர் நிர்மல் சுரஞ்சன் வன்னி மண் நற்பணி மன்றத் தலைவர் ச.மயூரன் மற்றும் உத்தியோகத்தர்கள் நாவாந்துறை கிராம மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-159)





65 ஆண்டுகளுக்குப் பின்னர்

# நாகர்கோவில் - எழுதுமட்டுவாழ் பாலத்துக்குப் புத்துயிர்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழ் செல்கின்ற வீதியிலுள்ள பிரதான பாலத்தை புதிதாக புனரமைக்கும் பணியை வடமாகாண ஆளுநர் வேதநாயகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார். நாகர்கோவில் எழுதுமட்டுவாழ் பிரதான பாலம் 1959 ஆம் ஆண்டு நீர்ப்போக்கு பாலமாக அமைக்கப்பட்டது. அதனால் மாரி காலம் ஆரம்பிக்கப்பட்டால் இந்தப் பாலத்தை பயன்படுத்த முடியாத நிலை காணப்படும். குறித்த வீதியை பயன்படுத்த முடியாமையால் மக்கள் சுமார் 7 கிலோமீற்றர் தூரத்திலுள்ள எழுதுமட்டுவாழ் சந்திக்குச் செல்வதற்கு மருதங்கேணி, புதுக்காடு ஊடாக சுமார் 40 கிலோமீற்றர் தூரம் சுற்றியே பயணித்து வந்தனர்.

இந்தப் பாலத்தை புனரமைப்புச் செய்வதற்கு அண்மைய வருடங்களாக பல தடவைகள் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் வன ஜீவராஜிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காரணத்தால் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டிருந்தன.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தியின் ஏற்பாட்டில் வடமாகாண ஆளுநர் வேதநாயகனின் தலையீட்டில் குறித்த பாலம் புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (ச-27)



# அலுவலர்களின்றி அரச அலுவலகம்

## மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஒக் 28

கிளிநொச்சி அறிவியல நகரில் உள்ள வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம், திறந்திருப்பினும் அங்கு எந்த அதிகாரிகளும் கடமையாற்றுவதில்லை என மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர். இந்தப் பிரதேசத்தில் குரங்குகளினால் ஏற்படும் அழிவுகளில் இருந்து விவசாயப் பயிர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பல தடவைகள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனாலும் கடந்த 10 ஆண்டுகளாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அலுவலகத்துக்குச் சென்றாலும் அங்கு அதிகாரிகள் பணியில் இருப்பதில்லை என்றும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-25,13)

# கல்வியில் பின்னடைவு; நடவடிக்கை இல்லை!

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு உரிய பதில் கல்வியமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கிடைக்கவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பிரதமர் அலுவலகத்தில் பிரதமருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. அதிபர், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பான விடயங்களை அவர் கேட்டறிந்துகொண்டார். எனினும் அதற்கான பதிலை அவர் வழங்கியிருக்கவில்லை. எதிர்வரும் வருடத்துக்கான பாதீட்டிலேயே இது தொடர்பான தீர்வுகளை முன்வைக்கவுள்ளதாக கல்வி அமைச்சரான பிரதமர் தெரிவித்தார் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்க!

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

**நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் சட்டங்கள் மற்றும் சுற்றுநிருபத்துக்கமைய ஜனநாயக ரீதியில் பிரசார நடவடிக்கைகளை எவ்வித முதரண்பாடுகளுமின்றி ஆரோக்கிய மேற்கொள்வதை உறுதிப்படுத்தவேண்டும் என்று யாழ்.பதில் மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம.பிரதீபனம் அறிவுறுத்தியுள்ளார்.**

யாழ்ப்பாண அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக்குழுத் தலைவர்களுடனான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சை குழுக்களும் போட்டியிடுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 48 வாக்கெண்ணும் நிலையங்களும், 17 அஞ்சல் வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. எனவே பெறு பேறு தயாரித்து வெளியிடும் நிலையத்துக்கு வேட்பாளர்களின் முகவர்களை சரியான பொறிமுறையூடாக சட்டத்தின் மூலம் நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தவேண்டும். இம் முறை மாவட்டச் செயலகத்தில் இயங்கும் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மேலதிகமாக சாவகச்சேரி, சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன- என்றார். (ச-27)

## சுற்றுலாத்தலங்களில் உயர் பாதுகாப்பு!

கொழும்பு, ஒக்.28

சுற்றுலாப் பயணத் தலங்கள் மற்றும் நாட்டின் பிரதான பகுதிகளில் குண்டுத்தாக்குதல்கள் உட்பட எந்தவொரு ஆபத்தான அச்சுறுத்தல்களும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் பிரதான சுற்றுலாத்தலங்களை மையப்படுத்திய தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுக் கட்டமைப்புகளுக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. அதனையடுத்து தேசிய பாதுகாப்புச்சபை உடனடியாக கூடி எடுக்கப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் அச்சுறுத்தல் நிலைமைகள் அனைத்தும் களையப்பட்டுள்ளன. சுற்றுலாப்பயணிகள் உட்பட நாட்டின் பிரஜைகள் அனைவரும் சுதந்திரமாக நடமாடமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரூ. 10 கோடி பெறுமதியான ஐஸ் போதை பறிமுதல்

கொழும்பு, ஒக்.28

சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் மலேசியாவிலிருந்து வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொத்தட்டுவ பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## மின்சாரம் தாக்கி சிறுவன் சாவு

கொழும்பு, ஒக்.28

கம்பஹா, வெயங்கொடை, அலவ்வ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என்று அத்தனகல்ல பொலிஸார் தெரிவித்தனர். வெயங்கொடை, அலவல பிரதேசத்தைச் சேர்ந்த 6 வயதுடைய சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச)



## ஆள்காட்டி விரலில் தேர்தலுக்கு மை

கொழும்பு, ஒக்.28

பொதுத்தேர்தலில் வாக்காளர்களுக்கு இடது கை ஆள்காட்டி விரலில் குறியீடு இடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்கு இடது கையின் கட்டை விரல் பயன்படுத்தப்பட்டுள்ளதால் பொதுத்தேர்தலில் ஆள்காட்டி விரலை பயன்படுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.28

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, நவம்பர் மாதம் 7ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்குச் சென்று விநியோகிக்கவுள்ளதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நவம்பர் 3ஆம் திகதி விசேட விநியோக தினமாக அறிவிக்கப்பட்டு. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார். (ச-இ)



## தினம் தெரியுமோ?

நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும் எண்டுவினம். அதைமாதிரி ஆகிப்போட்டுது கம்பஸ்காரரின்ர கதை. யாழ்ப்பாணக் கம்பஸில கலைப்பீடத்தில முதலாம் வருசம் படிக்கிறவை இண்டைக்கு 'ஸ்ட்ரைக்' ஒண்டு செய்யிறதுக்கு பிளான் போட்டிருக்கினம். இதென்னடா கம்பஸுக்கு வந்ததும் வராததுமா இந்தப்பிள்ளையள் ஸ்ட்ரைக்கில இறங்குதுகள் எண்டு நோண்டிப்பார்த்தால், அவை தாங்களா இதைச் செய்யேலையாம். அவையை வேற சிலர் தூண்டித்தான் இதைச் செய்ய வைக்கினமாம் எண்டு தெரிஞ்சுது. கம்பஸ் கிடைச்சாலே பெடியளுக்கு கனவுகள் வரும், அப்பிடியே சேர்ந்து கர்வமும் வந்திடும். 'நாங்கள் கம்பஸ், நாங்கள் நினைச்சால் என்னவும் செய்வம். ஆரையும் கேள்வி கேப்பம், நாட்டையே ஆட்டிவைப்பம்' எண்டெல்லாம் ஒரு மிதப்பும் வரும். ஆனால் கம்பஸுக்கு வந்தபிறகு, லெக்சர்ஸ், அசைன்மெண்ட், செமினார், பீல்ட்வேர்க், எக்ஸாம் எண்டு நேரமே இல்லாமல் அந்த வாழ்க்கை பிழிஞ்செடுக்கேக்கதான், அவைக்கு அதுவரைக்கும் தாங்கள் நினைச்சதுக்கும், யதார்த்தத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் எண்டு தெரியவரும். இதால அவை கம்பஸ் எண்ட மிதப்பில இருக்கேக்க அவையைத் தூண்டிவிட்டு, அதில குளிர்காயிற சிலர் இருக்கினம், அப்பிடிப்பட்டவைதான் இப்ப இந்தப் பிள்ளையளையும் தூண்டி இருக்கினம் எண்டு விசயமறிஞ்சவை சொல்லுகினம்.

கம்பஸில கலைப்பீடத்துக்கு வரேக்க அவையின்ர ஏ.எல். ரிசல்டையும், ஸற் ஸ்கோரையும் வைச்சு அவை என்ன பாடம் ஸ்பெஷல் செய்யப்போயினம் எண்டு 3 பாடத்தை எழுதிக்குடுக்கோணும். அந்த மூண்டில ஒண்டைத்தான் ரண்டாம் வருசம் படிக்கேக்க ஸ்பெஷல் பாடமாப் படிக்கலாம். முதலாம் வருசத்தில எல்லாப் பிள்ளையளும் தாங்கள் நினைச்ச பாடங்களை எடுக்கேலாது. அவை எடுக்கிற பாடத்துறையின்ர ஆளணிவசதியள் , பீடச்சபையின்ர அனுமதி, செனட் அனுமதி, கவுன்ஸில் அனுமதி எண்டு ஏகப்பட்ட விசயங்கள், அனுமதியளை வைச்சுத்தான் இன்னன்ன பாடத்துக்கு இவ்வளவு பேரைத்தான் எடுக்கலாம் எண்டு முடிவு செய்வினம். இவ்வளவுகாலமும் இந்தப் பாடத்தெரிவு பிரச்சினை இல்லாமல் தான் போனது. ஆனால் போனவருசம் கன பிள்ளையள் இதால பாதிக்கப்படுகினம் எண்டு போராட்டம் செய்து, அதுக்கு கலைப்பீடக்காரர் மனமிரங்கி சில பாடங்களுக்கு இன்னும் கொஞ்சப்பேரை எடுக்கலாம் எண்டு அனுமதி குடுத்தவை. ஆனால் இப்பிடி ஒவ்வொரு பாடத்துக்கு எத்தினை பேரை எடுக்கோணும் எண்டு லிமிட் இல்லாட்டி, சில பாடங்களுக்கு நூறு, இருநூறு பேர் எண்டும், சில பாடங்களுக்கு நாலைஞ்சு பேர் எண்டும் போற நிலைமை வந்திடும். அதால எல்லாப் பாடங்களுக்கும் பிள்ளையள் கலந்து போக வேணும் எண்டதாலையும் தான் இப்பிடி முதலே என்னென்ன பாடங்களை செலக்ட் பண்ணச் சொல்லி, அதில இருந்து பிள்ளையளை எடுக்கிறவை எண்டு கம்பஸ் நிர்வாக மட்டக்காரர் சொல்லுகினம்.

இப்ப என்னெண்டால் 'போனமுறை போராடினதாலதான் அப்பிடி கனபேருக்கு அனுமதி கிடைச்சது. அதால நீங்களும் போராடுங்கோ' எண்டு மாணவர் ஒன்றியக்காரர் தான், ஒண்டுமே தெரியாத இந்த முதலாம் வருடப் பிள்ளையளை தூண்டி விட்டிருக்கினம். ஏன் அவை அப்பிடிச் செய்யினம் எண்டால், முதல் அதில முக்கியமான பொறுப்பில இருந்தவருக்கு வகுப்புத்தடை விதிச்சிருக்கினம். அந்தக் கோபத்தில தனக்கு வகுப்புத்தடை போடுறதுக்கு காரணம் எண்டு அவர் நினைக்கிற கலைப்பீட நிர்வாகக்காரரை பழிவாங்கத்தான் இப்பிடி ஸ்ட்ரைக் எண்டு முதலாம் வருடப் பிள்ளையளைத் தூண்டி விடுறார் எண்டு கதைக்கினம். சொந்தக் கோபத்தை தீர்க்கிறதுக்காக இப்பிடி முதலாம் வருசப் பிள்ளையளைத் தூண்டிவிட்டு, அதில சுகம் காணுறவைக்கு இடமளிக்கிறது நாளைக்கு அவைக்குத்தான் கூடாது. ஏனெண்டால் அவை போராடுங்கோ எண்டு தூண்டிப்போட்டு நாலைஞ்சு மாதத்திலேயே கம்பஸை விட்டிட்டு போடுவினம். அதுக்குப்பிறகு அவையை நம்பிப் போராடின பிள்ளையள் நடுத்தெருவிலைதான் நிக்கோணும். அப்பிடியான நிலை வரக்கூடாது எண்டால், பிழையான ஆக்களின்ர சொல்பேச்சுக் கேக்காமல், எல்லாத்திலையும் 'மெய்ப்பொருள் காண்பதே அறிவு'

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெறப்போவது தேர்தல் அல்ல; நாட்டை துப்புரவாக்கும் சிரமதானம்

## பலமான அரசாங்கத்துக்கு ஆணை கேட்கின்றார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஒக். 28

**நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறப்போவது பொதுத்தேர்தல் அல்ல. துப்புரவாக்குவதற்கான மிகப் பெரிய சிரமதானமாகும். நவம்பர் 14ஆம் திகதி என்பது நாடாளுமன்றத்தை துப்புரவு செய்வதற்காக சிரமதானம் நடத்தப்படுகின்ற நாளாகும் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தப் பொதுத்தேர்தல் எந்தவிதமான போட்டியும் இல்லாமல் சோர்ந்துபோன ஒரு தேர்தல் என சிலர் கூறுகிறார்கள். எனினும், இந்தத் தேர்தலில் இலங்கை வரலாற்றின் மிகவும் தனித்துவமான வெற்றியை தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுக்கொடுப்பது உறுதியானதாகும். கடந்த நாடாளுமன்றம் பற்றி மக்கள் மத்தியில் எதிர்ப்பே நிலவியது. தங்கக் கட்டிகளை கடத்தி வந்து சுங்கத்தில் அகப்பட்டவர்கள் அண்மையில் நாடாளுமன்றத்துக்கு வந்து கையை உயர்த்தினார்கள். அதைப் போலவே, அங்குமிங்கும் கட்சிதாவி இறுதியில் எங்கே இருக்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள முடியாத திரிபு நிலை உருவாகியிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக பாடசாலை மாணவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தளவுக்கு அருவருப்பு நிலைக்கு உள்ளாகியிருந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்கு வாய்ப்பை வழங்கியிருக்கின்றோம். நவம்பர் 14ஆம் திகதி திசைகாட்டி யின் குழுவினரைக் கொண்டு நாடாளுமன்றத்தை நிரப்ப வேண்டும். நாங்கள் அவ்வாறு கூறும்போது மற்றுமொரு கும்பல் பலம்பொருந்திய எதிர்க்கட்சியை அமைத்துக்கொள்வதற்காக அழைப்பு விடுக்கிறார்கள். அது அப்படியல்ல. இந்த நேரத்தில் பலம்பொருந்திய அரசாங்கமொன்றே இருக்கவேண்டும்.
கட்டம் கட்டமாக நாட்டை உறுதிநிலைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (ஒ-இ)

# நாட்டின் பாதுகாப்பு நாமல் கரிசனை

கொழும்பு, ஒக்.28
நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் மீண்டும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நாட்டின் இராணுவ அதிகாரிகள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் மற்றும் அமைப்புகள் நாட்டின் முப்படைகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்பை பலப்படுத்தவும், நாட்டுக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்கவும் வேண்டும் என்றும் நாமல் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# பொதுத்தேர்தலில் வாகை சூடுவோம்

## தே.ம.சக்தி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.28
எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலைவிடவும் அமோக வெற்றி பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப்பெறும் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.
தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு குறைந்து வருகின்றது என எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் முடிவுகளை சுட்டிக்காட்டி எதிரணிகள் கருத்து வெளியிட்டுவரும் நிலையிலேயே, அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் சுனில் வட்டகல.
எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலென்பது தேசிய மட்ட தேர்தல் அல்ல. எனினும், அங்கு கூடுதல் வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கே கிடைத்துள்ளது. இது எமக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். இதைவிட பெரிய வெற்றி பொதுத்தேர்தலில் எமக்குக் கிடைக்கப்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# சுற்றுலாத்துறையை சீர்குலைப்பதற்கு சதி

## ஐ.ம. சக்தியும் காட்டம்

கொழும்பு, ஒக்.28
இலங்கையில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பிரசாரத்தின் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறையை சீர்குலைக்க சதி நடத்தப்படுகின்றதா என்பது குறித்து ஆராய வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.
இலங்கையில் சுற்றுலாத்துறையை மையமாகக் கொண்ட கிழக்கு பிராந்தியம், தென் பிராந்தியம், மேற்கு பிராந்தியம் மற்றும் சுற்றுலா புவியியல் பிரதேசங்களில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டுப் புலனாய்வு செய்திகள் தெரிவித்துள்ளன.
நாட்டின் பாதுகாப்பு குறித்து அச்சமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன.
நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டும்.
ஒரு கட்சியாகவும் கூட்டணி என்ற ரீதியிலும் நாங்கள் இந்த விடயத்தை மிகவும் பொறுப்புடன் பார்க்கின்றோம். இந்த விடயத்தில் நாங்கள் அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மாற்றம் எனும் மாயையில் நாம் அகப்பட்டுவிடக்கூடாது

## வேட்பாளர் சசிகலா ரவிராஜ் சுட்டிக்காட்டு



யாழ்பபாணம், ஒக்.28
தமிழ்த் தேசிய உணர்வை குழி தோண்டிப் புதைக்க முயலும் தென்னிலங்கை சக்திகளின் அபிவிருத்தி, மாற்றம் என்ற மாயவலைகளுக்குள் எமது கொள்கைத் தியாகங்கள் காவு கொள்ளப்படக்கூடாது.
-இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
தமிழர்களின் பூர்வீக பூமி மேலைத்தேய அந்நிய சக்திகளால் அபகரிக்கப்பட்டது. பின்னர் இலங்கை மக்களுக்கு சுதந்திரம் என்று அறிவிக்கப்பட்டு நாட்டின் ஆட்சி அதிகாரம் தென்னிலங்கை சக்திகளிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்துவரும் அநீதிகளுக்கு எதிராக எமது மூத்த தலைவர்களால் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
அன்றைய இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி உரிமைகளுக்காகப் போராடினர். அதே நேரம் அறவழியிலும் போராடினர். போராட்டங்களில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இத்தனை ஆயிரம் உயிர்த்தியாகங்களின் தொடராக எமது உரிமைகளுக்காக குரல்கொடுக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். அற்பசொற்ற வாக்குறுதிகள் பெறுமதியானவையா? என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். எமக்கான உரிமைக்கான குரல்களை வலுப்படுத்த மக்கள் ஒன்றிணையவேண்டும் - என்றார். (ச-20)

# வாக்களிக்கும் முறைமை யாழில் கலந்துரையாடல்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செல்லுபடியற்ற வாக்குகள் யாழ்.மாவட்டத்தில் அதிகமாகக் காணப்பட்டமையைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாக நாடாளுமன்றத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்கவுள்ள யாழ்.மாவட்டத்தின் ஒவ்வொரு திணைக்களத்தையும் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்குத் தெளிவுபடுத்தும் விழிப்புணவுக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. வாக்களிப்பு முறைமை தொடர்பில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் விளக்கமளித்தார். (ச-66,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் 'இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான இலக்கிய விழிப்புணர்வு நிகழ்வு யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. (ரி-66)



# ஜோன்ஸ்டனை சந்தித்த மஹிந்த

கொழும்பு, ஒக்.28

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பார்வையிடுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கோலப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 28

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கோலம் போடும் போட்டி பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி)





# உதவி வழங்கல்

பளை, ஒக். 28

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தர்மக்கேணி அ.த.க.பாடசாலை மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை ஸ்மார்ட் பலகை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (ரி-9)

சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு மூலம் இலங்கையில் இயலாமையுடன் கூடிய நபர்களின் சமூக உள்ளடக்கம் எனும் வேலைத்திட்டத்தினை ஆதரித்து பரிந்துரையாடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் கலந்துகொண்டார். (ச-22,35)








# முதியோர் தின விழா

மன்னார், ஒக்.28

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் இலங்கை மெதடிஸ்த திருச்சபை 'டெப்லிங்' பணியகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 'கண்ணியத்துடன் முதுமை உலகளாவிய ரீதியில் முதியோர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஆதரவு முறைமைகளை பலப்படுத்துவதன் முக்கியத்துவம்' எனும் தொனிப்பொருளில் முதியோர் தினவிழா மாந்தை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25, 60)





# உதவி வழங்கல்

பளை, ஒக். 28

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தர்மக்கேணி அ.த.க.பாடசாலை மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை ஸ்மார்ட் பலகை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (ரி-9)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரவெட்டி கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான இறுதிச் சுற்றுப்போட்டிகள் கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (ச-25.100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.மக்கள் சக்தியின் வாக்குவங்கி சரிவே

கொழும்பு, ஒக்.28

தேசிய மக்கள் சக்திக்கான வாக்கு வங்கி குறைந்துவிட்டது என்பதையே எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் முடிவுகள் வெளிப் படுத்துகின்றன. அந்தக் கட்சியின் வேலைத்திட்டத்தை மக்கள் அனுமதிக்கவில்லை என்பதும் உறுதியாகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலில் தமக்கு 70 சதவீத வாக்குகள் கிடைக்கப் பெறும் என்று தேசிய மக்கள் சக்தி நம்பியது. எனினும், தேசிய மக்கள் சக்தியில் 15 உறுப்பினர்களே தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். எதிரணியில் இருந்தும் 15 உறுப்பினர்கள் தேர்வாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



## நெருக்கடிக்குள்ளேயே பரப்புரை முன்னெடுப்பு

### பார்த்திபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 28

பல தடைகளையும் நெருக்கடிகளையும் தாண்டியே நாங்கள் எமது பரப்புரைப் பணிகளை முன்னெடுத்து செல்வதாக தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் போட்டியிடும் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

யாழ். நகர்ப் பகுதியில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்ட அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-எங்களின் பரப்புரை நடவடிக்கைகளை முடக்குவதற்கு பல்வேறுபட்ட சதித்திட்டங்களை அரசு தரப்பினரும், அவர்களுடன் இணைந்துசெயற்படும் தரப்பினர்களாலும் மேற்கொள்ளப் படுகிறது.

தடைகளையும் நெருக்கடிகளையும் தாண்டித் தான் நாங்கள் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றோம். தமிழ் மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அந்த மாற்றத்தை இளையோரான நாங்கள் தொடர்ந்து வழங்குவோம் - என்றார். (ஒ-20)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.04.1954

மறைவு 03.10.2021

### சின்னத்துரை சிவகடாட்சம்

(சட்டத்தரணி)

**திதி: துவாதசி**


சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் இன்று (28.10.2024) திங்கட்கிழமை சின்னத்துரை சிவகடாட்சம் அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்று ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

துயர் பகிர்வோர்
குடும்பத்தினர்
077 499 2038

(cs 56513) (N-1)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01.04.1947 |  | 24.10.2024 |

### ஆறுமுகம் மயில்வாகனம்

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மயில்வாகனம் கடந்த 24.10.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பர்வதம், குஞ்சிப்பிள்ளை, இரத்தினம், பார்வதிப்பிள்ளை மற்றும் நல்லம்மா, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிரிதாஸ், ஷோபிகா, பவித்ரா, நிதர்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்மிளா, காண்டீபன், மகிந்தன், றிஷான் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆதிரன், ஆத்திரிகா, வர்ஷிகா, அகிஷா, சஞ்சனா, சகித், சன்ஜிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 900 4585

(cr 43492 (N.1)

## மணமகள் தேவை

1. கோண்டாவில் - கல்வியன்காடு. இந்து கௌரவகுலம் (V) 1990, ரேவதி. Phd in Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. 34935
2. தெல்லிப்பளை. இந்து கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc, Engineering USA மணமகனுக்கு மணமகள் தேவை. 34337
3. காரைநகர். இந்து கௌரவகுலம் (V) 1989, சித்திரை. Graduate UK மணமகனுக்கு மணமகள் தேவை.
4. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V) 1990, அவிட்டம். BSc (Hons) கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
5. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1987, உத்தரம் BSc, ACMA, CGMA Senior Financial Analyst, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
6. கரம்பன் - Jaffna Town இந்து கௌரவகுலம் (V).1988, ரோகினி. BSc Engineer கனடா மணமகனுக்கு மணமகள் தேவை. 28033
7. உரும்பிராய் - இணுவில். இந்து கௌரவகுலம் (V).1991 பூரம். Network Engineer, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. 29309
8. கந்தர்மடம். இந்து கௌரவகுலம் (V) 1989 உத்திராடம். MSc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
9. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1986 திருவோணம். BA (Hons) CIMA Fully Qualified, UK மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P.
www.thaalee.com
077 539 3728
whatsap: 077 803 8193

(cs.56551)(N-1)

## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரியின் கலைப்பிரிவு இணைப்பாளர்
சிரேஷ்ட ஆசிரியர் நா.புவனேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

### நாகரட்ணம் பரமேஸ்வரி



அவர்கள் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

துயருடன்....
ஆசிரியர் நட்புறவுக்கழகம்,
யா / மானிப்பாய் இந்துக்கல்லூரி

## விண்ணகப் பிறப்பின் முதல் வருடம்

(28.10.2024)

| மண் உலகில் | | விண் உலகில் |
|---|---|---|
| 18.07.1943 |  | 10.11.2023 |

### தங்கராஜா துரைராஜா

**திதி: அபரபக்க துவாதசி**

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே,
இமை நொடிக்கும் நேரத்தில் பிரிந்ததேனோ!
அதை இன்னும் ஏற்க மனம் மறுப்பதேனோ!
காலங்கள் பல உருண்டோடலாமப்பா, ஆனால்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றென்றும் அகலாதப்பா....!

35/2, குமாரசாமி வீதி,
யாழ்ப்பாணம்.


நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs53141) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 04 . 1948



மறைவு
27 . 10 . 2024

### சுந்தரம் சுப்பிரமணியம்

நீர்வேலி வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சுப்பிரமணியம் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், நவரூபன் (சுவிஸ்), சிவரூபன், ஜெயரூபன் (லண்டன்), காந்தருபன் (வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்), தேவரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தினி (சுவிஸ்),கௌதமி, பிரகலா (லண்டன்), தர்சினி ஆகியோரின் மாமனாரும், சஜிக்கா (சுவிஸ்), சஜீவன் (சுவிஸ்), சஜித்தன் (சுவிஸ்), விதுரா, டிலக்ஷிகா, மயூரிகா, ஜீவிகா (லண்டன்), சியானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/56537) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 03 . 1951



இறப்பு
27 . 10 . 2024

### இராமச்சந்திரன் சரஸ்வதி (மலர்)

வேலணை வடக்கு 5ம் வட்டாரம் பள்ளம்புலத்தினைப் பிறப்பிடமாகவும், 66/14, இந்து மகளிர் வீதி, கந்தர்மடத்தினை சொந்த வாழ்விடமாக கொண்டிருந்த வரும், தற்போது லண்டன் மாநகரில் வசித்து வந்தவருமாகிய இராமச்சந்திரன் சரஸ்வதி (மலர்) அவர்கள் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - பாக்கியலெட்சுமி தம்பதியரின் மருமகளும், இராமச்சந்திரன் (முன்னாள் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சிரேஸ்ட ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், குகப்பிரியன், கௌசல்யா, நிரூஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கீர்த்தனனின் அன்பு மாமியாரும், நாகேஸ்வரி - சிவலிங்கம், சிவம் - இந்திரா, லோகேஸ்வரி (விமலா) - கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலாம்பிகை - அரசரெத்தினம், பத்மராணி - இராசதுரை, பாலச்சந்திரன் - விஜயா, சிவகங்கை - சச்சிதானந்தசிவம், சிவச்சந்திரன் - ராசாத்தி, கிருபாநிதி - ஸ்ரீபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/14, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரி கை.கணேசமூர்த்தி
லோகேஸ்வரி (விமலா)
077 9256 794
077 5939 777

(CS1591) A-1

## மரண அறிவித்தல்



### புவனேஸ்வரி அமிர்தலிங்கம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த 25.10.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா இளையாச்சியின் அன்பு மகளும் கந்தையா-நாகம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அனிந்திரா, சுகந்தி, தயானந்தி, காலஞ்சென்ற துஷ்யந்தி மற்றும் மைதிலி, சுதர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவானந்தன், கோபிநாத், விமலச்சந்திரன், மோகன், தனுஷா ஆகியோரின் மாமியாரும் விதுரன், மயூரி, ஆரணி, சவித்துரு, துவீரன், சாயினி, துஷாரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10:30 மணி யளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
071 806 6411
076 672 0788

(CS 1716) P-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 12 . 1956



மறைவு
27 . 10 . 2024

### மார்க்கண்டு யோகேஸ்வரன்

உரும்பிராய் வடக்கு உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு யோகேஸ்வரன் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி-இராசமலர் தம்பதி யரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், தபீசன், காலஞ்சென்ற புதர்சன் மற்றும் நிரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி, கமலேஸ்வரி, கமலேஸ்வரன், தனேஸ் வரன், தனேஸ்வரி, விமலேஸ்வரி, விமலேஸ்வரன், சாந்தேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலேஸ்வரி, இரவீந்திரன், சுதாகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2024) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:
077 146 0618, 077 028 0382

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

(CS 56554) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்கப்பட்டவர்களுக்கு கை விலங்கு: தாக்கியோர் இன்னும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த போது தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு பொலிஸார் மருத்துவமனையில் கைவிலங்கிட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது நீர்வேலி கரந்தனில் வைத்து நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. காயமடைந்த பெண் உள்ளிட்ட மூவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவும் பொலிஸார் பின்னடித்த நிலையில், யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக முறைப்பாடு பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தாக்குதலுக்கு இலக்கானவர்களுக்கு பொலிஸார் கைவிலங்கிட்டுள்ளனர். தாக்குதல் சம்பவம் நடைபெற்று 24 மணி நேரம் கடந்துள்ள நிலையிலும் தாக்குதலாளிகள் எவரையும் கைது செய்யாத பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு கைவிலங்கிட்டுள்ளமை அச்சுறுத்தும் செயற்பாடே என தமிழ் மக்கள் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர். (ஒ-20)


## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1972



மறைவு 27 . 10 . 2024

### சிவகுரு மோதிலால் கந்தையா

(சிரேஷ்ட கணக்காளர், மாநகர சபை, வவுனியா)

நவாலியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவ்வ வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு மோதிலால் கந்தையா அவர்கள் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சிவகுரு - இராசபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், மிரியம் வொலன்ரினா (பவா) (அபிவிருத்தி உத்தியோகத்தர், செட்டிக்குளம் பிரதேச செயலகம்) அவர்களின் பாசமிகு கணவரும், கஷோனா, அஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகஜீவன் (ஆசிரியர், கொழும்பு சர்வதேச பாடசாலை), கேதாரகௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), வித்தியா கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஜித்தா ஜெகஜீவன் (பணிப்பாளர், மத்திய வங்கி (ERD)), மதிவர்ணன் (ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி), மோகனராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தேஜனா, ஜஸ்வந்தி ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும், ரிஷியா, ஜயவன், டவர்ஷன், அனோமிதன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பெரிய மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (29.10.2024) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக கொள்கின்றோம்.

தொடர்பு: 077 6266 337

(CS 1719) A-1

தகவல்: குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

### திருமதி லோகநாதன் இந்திராணி



நயினாதீவு 5ம் வட்டாரம், புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புகையிரத வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகநாதன் இந்திராணி அவர்கள் நேற்று (27.10.2024) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரிகை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி.லோகநாதன் (கணவர்)
077 923 4242



## மரண அறிவித்தல்

### கனகாம்பிகை வைத்தியநாதன்



சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை வைத்தியநாதன் அவர்கள் கடந்த (26.10.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதன் (ஓய்வு பெற்ற மீன்பிடி லாகா இலிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாநடேசர்-இரத்தினவல்லி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரைசாமி-மாணிக்கவல்லி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ரோகிணி, வரதராசன் (கனடா), இந்திராணி பிரியதர்சினி (லண்டன்), காலஞ்சென்ற தில்லைராசன் (கனடா), குமுதினி (கனடா), சவுந்தரராசன் (லண்டன்), திருவருட்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தகுமார், கலாவாணி (கனடா), சுந்தரதாசன் (லண்டன்), இராஜலட்சுமி (கனடா), மகேந்திரன் (கனடா), மாணிக்கவசந்தினி (லண்டன்), சற்குருநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மனோன்மணி, சபாநாதன், அருளாம்பிகை மற்றும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகரட்ணம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், இராமச்சந்திரன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனோஜன்-சுபாஷினி, ஆரணி-நிரோசன், ஆரபி-நிதர்சன், அஜந்தன், ரேவதி, அஸ்ஷினி, லவண்-அபர்ணா, அருணன்-சித்ரா, அருந்ததி-குகரூபன், ஜனனி, யாதவன், கன்னிக்கா, மதீபன், மதீரன், சபீரன்-அனுசியா, திவ்யன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆத்வீகன், பானுகவி, வைதேகி, வேலவன், கதிரவன், கைலாஸ், கயலினி, ஆகியோரின் ஆசைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.10.2024 (திங்கட்கிழமை) மதியம் 01.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 3.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 08.01.1933

மறைவு 26.10.2024

52, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 205 1104
077 652 5656(சாந்தகுமார்)
+44 7969872383(சுந்தரதாசன்)
+44 7852314837(சவுந்தரராசன்)

(CS 1717) P-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்...

ஹோமாகமவில் நேற்று இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியான வெற்றியைப் பெறும். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தான் ஆட்சிக்கு வந்தால் வரிச்சூத்திரத்தை மாற்றுவேன், நேரடி மற்றும் மறைமுக வரிகள் குறைப்பேன் எனத் தெரிவித்தார். என்றாலும் சர்வதேச நாணயநிதியத்துடன் ஜனாதிபதி இரண்டு சுற்றுப் பேச்சுகளை நடத்திய போதிலும், அந்த வரிகளை குறைப்பதில் உடன்பாடு காணப்படவில்லை என்று சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது. தேர்தலின்போது வரியைக் குறைப்பதாகச் சொன்னாலும், ஆட்சிக்கு வந்த பிறகு அதனை உரியவாறு அவரால் செய்ய முடியாது போயுள்ளது.

இன்றும் கூட ஜனாதிபதியால் வரிகளை குறைக்க முடியவில்லை. மக்கள் விடுதலை முன்னணியால் முடியாது போனாலும், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது பல சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணயநிதியப் பிரதிநிதிகளை சந்தித்து, நாட்டு மக்களின் ஆணை எமக்கு கிடைத்தால் அவர்களின் சட்டகத்துக்குள் இருந்தவாறு வரி சூத்திரங்களை மாற்றுவோம் என்ற இணக்கப்பாட்டை எட்டியிருந்தோம். அப்போது சர்வதேச நாணய நிதியம் அதற்கு இணக்கம் தெரிவித்தது. ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் செய்ய முடியாததை ஐக்கிய மக்கள் சக்தியால் செய்ய முடியும் - என்றார். (அ-ஒ-இ)

## காட்டு...

தாக்கப்பட்ட இளைஞன் உயிரிழந்துள்ளார். கேந்திரராசா பிறையாளன் (வயது - 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த இரண்டு நாட்களாக 3 யானைகளின் அட்டகாசம் தாங்கமுடியாத நிலையில் வன ஜீவராசிகள் திணைக்க ளத்தினருக்கு தகவல் கொடுக்கப்பட்டும் உடனடியாக அவர்கள் வரவில்லை. மாலைவேளையிலே அவர்கள் வந்துள்ளனர். இந்த நிலையில் யானைகளை அடையாளம் காட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினருடன் சென்றபோதே இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடல் பிரதேச மக்களால் மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-19)

## மயங்கியவர்...

தில் சென்றுள்ளார். பேருந்தில் மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

## ஜனாதிபதி...

யில்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'அப்படியென்றால் எங்கள் இருவருக்கும் இடையில் என்ன வித்தியாசம் ?' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் தோல்வியடைந்தால் என்னை வீட்டிலிருக்குமாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். எனக்கு பெரும்பான்மையானவர்கள் வாக்களிக்கவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நான் பெரும்பான்மை இல்லாத முன்னாள் ஜனாதிபதி. அநுரகுமார திஸாநாயக்க பெரும்பான்மை இல்லாத ஜனாதிபதி. மக்கள் அநுரகுமார திஸாநாயக்க மூன்று மாதங்களுக்கே பதவி வகிப்பார் எனத் தெரிவிக்கின்றனர். நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை. அவர் தனது பதவியைத் தொடரவேண்டும்.

அனுபவசாலிகள் நாடாளுமன்றத்தில் இருந்தால் ஜனாதிபதியால் மூன்று வருடங்கள் ஆட்சி செய்ய முடியும். அவ்வாறான சூழ்நிலை காணப்படாவிட்டால் நாட்டில் வரிசைகள் யுகம் உருவாகும்.

தற்போதைய தேங்காய் வரிசைகளுக்கு பதில் புதிய வரிசைகள் உருவாகும் - என்றார். (அ-ஒ-இ)

## வீட்டாரைத்...

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை திருடிச் சென்றுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வீடொன்றுக்கு சிறுவனுடன் சென்ற பெண் கோயிலுக்கு நிதி சேகரிக்க வந்துள்ளதாக கூறியுள்ளார். இந்த நிலையில் அவர்கள் பணத்தை கொடுக்க குடிக்க நீர் கேட்டுள்ளனர். வீட்டிலிருந்த பெண்கள் குடிக்க நீர் கொடுத்து உள்ளனர். இதன் போது சாத்திரம் பார்ப்பதாகக் கூறி பலவந்தப்படுத்தி வீட்டில் இருந்த இருவருக்கு சாத்திரம் பார்த்துள்ளார்.

இதன் போது வீட்டிலிருந்த இருவருக்கும் சுய நினைவை இழக்கச் செய்யும் வகையில் மருந்து விசிறியுள்ள நிலையில், அவர்கள் சுய நினைவை இழந்ததும், சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை அபகரித்துச் சென்றுள்ளார். பல மணி நேரங்களுக்கு பின்னர் அவர்கள் சுய நினைவு திரும்பிய நிலையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இதேவேளை சந்தேகிக்கப்படும் பெண் சிறுவன் ஒருவருடன் வீதியால் சென்ற சி.சி.ரி.வி. காணொலியும் வெளியாகியுள்ளது. (அ-ஒ.56)

## காலம்...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியிலும் கடற்றொழில் அமைச்சராக வரப்போவதாகச் சொல்லி வாக்குக்கேட்கின்றார். அவ்வாறானவர்களை ஒருபோதும் நாம் எம்முடன் இணைத்துக்கொள்ளப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் அநுரகுமார திஸாநாயக்கவை சந்திக்கும் சந்திப்புக்களைப் பயன்படுத்தி அரசியல் நாடகங்களை சிலர் நடத்தி வருகின்றனர். டக்ளஸ் தேவானந்தா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் போன்றவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அவை நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களே.

இங்குள்ள மக்களுக்கு நாங்கள் ஒருவிடயத்தை மாத்திரம் சொல்லிக்கொள்கின்றோம். தேசிய மக்கள் சக்தியில் இருப்பது வெறும் 25 அமைச்சுக்கள் தான். தேசிய மக்கள் சக்தியில் அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதற்கு 50க்கும் அதிகமான திறமை வாய்ந்தவர்கள் இருக்கின்றனர். இங்கிருக்கும் முன்னாள் அமைச்சரே, (கடற்றொழில் அமைச்சராக இருந்தவர் டக்ளஸ் தேவானந்தா) எமக்கு எந்தவிதமான ஆளணித் தட்டுப்பாடும் இல்லை. உங்களைப் போன்றவர்களை எங்கள் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள மாட்டோம். மன்னித்துக் கொள்ளுங்கள். நான்தான் வெளிநாட்டு அமைச்சர், நான்தான் நீதி அமைச்சர் என்று இன்னொருவர் கூறுகின்றார். அவர்களுக்கும் நாங்கள் இதையேதான் கூறுகின்றோம். இவ்வாறான கூற்றுக்களை முன்வைப்பது வெட்கக்கேடான செயல் - என்றார். (அ-ஒ-சி-26)

## அரைகுறையாக...

வல்களை திரட்டி அவர்களை அம்பலப்படுத்துவோம் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்க 200 க்கும் அதிகமான பார் பெர்மிட்டுக்களை வழங்கியுள்ளார். அவற்றில் பெரும்பாலானவை ஏனைய கட்சிகளில் இருந்து ரணில் பக்கம் தாவியவர்கள் அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தவர்களுக்கே வழங்கப்பட்டிருந்தன என்பது எமக்குத் தெரியும்.

அதற்குச் சிறந்த உதாரணமாக தொலைக்காட்சியில் நடைபெற்ற விவாதத்தில், திகாம்பரம், ரணில் பக்கம் தாவிய வேலுகுமாரைப் பார்த்து 'பார் குமார்' என்று கூறியிருப்பார். அதிலிருந்தே இது எமக்கு நிரூபணமாகியிருந்தது.

அந்த 200 பார் பெர்மிட்களில் அதிகமானவற்றைப் பெற்றிருப்பவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தான். வடமாகாணத்தில் ஒரு சிலர் பெற்றுக்கொண்டமை தற்போது அம்பலமாகியிருக்கின்றது.

இந்த பார் பெர்மிட்டுக்களைப் பெறுகின்றபோது இவர்கள் மிகவும் சூட்சுமான முறையில் கையாண்டிருக்கின்றார்கள். தங்கள் பெயர்களில் அவற்றை எடுக்காது வேறு நபர்களின் பெயர்களிலேயே வாங்கப்பட்டிருக்கின்றன. அதனால் நாங்கள் இந்தப் பட்டியலை உடனடியாக வெளியிட்டால் அதில் தங்கள் பெயர்கள் இல்லை என்று கூறித் தப்பித்துவிடக் கூடிய வாய்ப்பு அமையும்.

எமது புலனாய்வுப் பிரிவைச் சரியான முறையில் பயன்படுத்தி அவற்றின் உண்மையான சொந்தக்காரர் யார், பரிந்துரைத்தவர் யார் என்பதை வெளிக்கொணர வேண்டிய தேவை இருக்கின்றது. அதற்கு ஒரு குறுகிய காலம் தேவைப்படுகின்றது - என்றார். (அ-ஒ-சி-26)

## 12 மீனவருக்கு...

களையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வடமராட்சிக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேரை நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் ஒரு படகுடன் ல்கது செய்தனர்.

கைதாகிய நாகை மீனவர்களை நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கடற்படையினர் கையளித்திருந்தனர். இந்த நிலையில் நாகை மீனவர்கள் 12 பேரையும் பருத்தித்துறை பதில் நீதிவான் பி.குமாரசுவாமி முன்னிலையில் நீரியல்வளத்துறை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்ட னர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் பன்னிரு மீனவர்களையும் நவம்பர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-ஒ-27,66,100)

## நல்லாட்சியில்...

வது நகைப்புக்குரிய விடயம். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2015ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழரசுக் கட்சிக்கு அரிய வாய்ப்பு இருந்தது. அதைச் சரிவரப் பயன்படுத்தவில்லை. அதைப் பயன்படுத்தியிருந்தால் தமிழ் மக்களுக்கு பல்வேறு உரிமைகளைப் பெற்றுக்கொடுத்திருக்கலாம். அந்த வாய்ப்புக்கள் அனைத்தையும் தவறவிட்டுவிட்டு, மக்களுக்குப் பொய் சொல்வதைத் தவிர வேறு எதையும் இவர்கள் செய்யவில்லை. மக்களால் தங்களுக்குக் கிடைத்த வாகனங்களை விற்று சொகுசு வாழ்க்கையை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இவர்கள்.

ஒரு சில அரசியல்வாதிகள் இப்போது மதுபானச்சாலை உரிமையாளர்களாக மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அல்லது மதுபானச்சாலைகளை ஏனையவர்களுக்குக் கைமாற்றிக் கொடுத்தவர்கள் தொடர்பாகக்கூட அண்மையில் ஊடகங்களில் வெளிவந்திருந்தது. மக்களுக்கு இவர்களின் சித்து விளையாட்டு என்ன என்பது தெரியும். அதனால் அவர்கள் இன்று மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர்.

மேலும், நாங்கள் சர்வதேச - வெளிநாட்டு விசாரணைக்கு எதிரானவர்கள் என்று கூறுகின்றனர். அதில் எந்தவிதமான உண்மையும் கிடையாது. இங்குள்ள ஊடகங்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி அமைச்சரவை தீர்மானத்தை முழுமையாக வாசிக்காமல் விமர்சிக்கின்றனர். இவர்களுக்கு தமிழ் மக்களுக்குக் கூறுவதற்கு இப்போது எதுவும் கிடையாது. தமிழ் மக்களை இனவாத ரீதியில் சூடேற்றி அதைக் குளிர்காயும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எமது பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்கள் எமக்கு நீதியை வழங்காது. வெளிநாட்டு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை எட்டி உதைத்துவிட்டு இப்போது உலக நாடுகள் செயற்படுகின்றன - என்றார். (அ-ஒ-சி-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தே.ம.சக்தியின் மறுமுகம் இப்போது புலப்படுகிறது!

### ஐ.ம.சக்தியின் வேட்பாளர் மு.சந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

தேசிய மக்கள் சக்தியினர் தமது உண்மை முகங்களைத் தற்போது வெளிக்காட்டி தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துவருகின்றனர்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஏராளமான சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கி வாக்குகளைச் சிதைக்க முயற்சிக்கின்றனர். அவர்கள் யார் என்பது பற்றி மக்கள் மத்தியில் தெளிவு இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி கட்சி மாத்திரமே சிறுபான்மையினர் மீது அக்கறை உள்ளவர்கள்.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இனவாதி இல்லை. அவரே சிறுபான்மையினர் மீது அக்கறை கொண்டவர். தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிப்பீடம் ஏறி எதனையும் செய்யவில்லை. தேசிய மக்கள் சக்தியினரின் உண்மை முகங்கள் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன - என்றார். (ச-26,20)

# உலகின் உயரமான கட்டடம் சவூதி அரேபியாவில்!

றியாத், ஒக்.28

சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் உலகிலேயே உயரமான கட்டடத்தொகுதிக்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடம் 400 மீற்றர் உயரம் மற்றும் 2.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவில், 50 பில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படவுள்ளது.

இது அமெரிக்காவிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடத்தைப்போன்று 20 மடங்கு பெரியது. இது ஒரு கலாசார மையமாக அமையும் எனக் கூறப்படுகிறது. இங்கு 104, 000 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஒரு வர்த்தகப் பொழுதுபோக்கு மையமாக இந்த இடம் அமையவுள்ளது. சவூதி அரேபியா சர்வதேச பொருளாதாரத்திற்கு ஈடுகொடுக்கும் முகமாக பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலகின் உயரமான கோபுரமான ஜெத்தா கோபுரம் அமைக்கும் பணி இன்னமும் பூர்த்தியாகவில்லை. இவற்றுடன் பாலைவனத்தினூடாக 170 கிலோமீற்றர் நீளமான நகரத்தை உருவாக்கும் திட்டத்தில் 2.4 கிலோமீற்றர் அளவீடு செய்யப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம் பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 6)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 248 7774
2024 தொழில் நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான
மாபெரும் விசேட செயலமர்வு
8.00 am - 3.00 pm
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் - நவம்பர் 1, 2
- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் } நவம்பர் 3, 4
- ICT, விவசாயம், கணிதம் (7)
- புவியியல், ஊடகக்கற்கை } நவம்பர் - 9, 10, 11
சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"
மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்
077 248 7774, 076 552 9093

பதிவுகள்
ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர்
இலவச விசா
காத்திருக்காமல்
உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும்
அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும்
தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன்
நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம்
A/L
எடுக்கிறவர்களும்
விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 03 . 1939

மறைவு 23 . 10 . 2024

### திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி கடந்த 23.10.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜீவா (கனடா), ஜீவநந்தினி (லண்டன்), காலஞ்சென்ற ஜீவசொரூபி (சுவிஸ்), ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதலச்சுமி (வாசுகி -கனடா), ரஜீந்திரன் (லண்டன்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜீவன், கௌசிகன் (கனடா), றொஷானி, கிருஷான் (லண்டன்), மிதுர்ஷன், ஜதுர்ஷன் (சுவிஸ்), டிலோஷன், பிரியந்தன், ஹாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.34, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/56537) N-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 16 . 09 . 1976

மறைவு 29 . 09 . 2024

### கனகரத்தினம் வசீகரன்

(முன்னாள் பொற்பதி நகைமாட உரிமையாளர்)

பிறப்பின் பலனை பிறர்க்காகவே வாழ்ந்தவன் நீ
சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றை வடிவம் கொடுத்தவன் நீ
இன்று சொல்லனா துயரத்தில் ஆழ்த்திவிட்டாய்.

கடந்த 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (29.10.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் மண்டைதீவு - 6 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசிவழியாக ஆறுதல் கூறியோருக்கும், பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துகொள்கின்றோம்.

மண்டை தீவு - 06

குடும்பத்தினர்

(cs.56530) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.